www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

UPSC CSE 2016 MAINS PAPER A DECEMBER 07, 2016 TAMIL (COMPULSORY) LANGUAGE QUESTION PAPER

# தமிழ் / TAMIL

## (கட்டாயத்தாள்) / ( COMPULSORY )

| கால அளவு : **மூன்று** மணி நேரம்<br>*Time Allowed : **Three** Hours* | மொத்த மதிப்பெண்கள் : **300**<br>*Maximum Marks : **300*** |
|---|---|

## வினாத்தாளுக்கான விதிமுறைகள்

**வினாக்களுக்கு விடை எழுதும் முன் கீழ்க்காணும் விதிமுறைகளைக் கவனமாகப் படிக்கவும் :**

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

வினா/வினாப்பகுதிகளுக்கான மதிப்பெண்கள் அவற்றின் எதிரே தரப்பட்டுள்ளன.

விடைகள் **தமிழில்** (தமிழ் எழுத்தில்) மட்டுமே எழுதுதல் வேண்டும். அல்லது வினாத்தாளில் குறிப்பிட்டபடி எழுதுதல் வேண்டும்.

எந்தெந்த வினாக்களில் சொற்களின் எண்ணிக்கையளவு கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அதன்படி விடை எழுதுதல் வேண்டும். குறிப்பிடப்பட்டிருக்கும் எண்ணிக்கையளவுக்கு மிக அதிகமாகவோ அல்லது குறைவாகவோ விடை அமைந்தால் மதிப்பெண்கள் குறைக்கப்படும்.

வினா-விடைக் கையேட்டில் எழுதாத பகுதி/பக்கங்கள் இருப்பின் அவற்றின் குறுக்கேக் கோடு கிழிக்கவும்.

## QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*All questions are to be attempted.*

*The number of marks carried by a question / part is indicated against it.*

*Answers must be written in **TAMIL** (Tamil script) unless otherwise directed in the question.*

*Word limit in questions, wherever specified, should be adhered to and if answered in much longer or shorter than the prescribed length, marks will be deducted.*

*Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*



prepp Your Personal Exam Guide

www.prepp.in
Prepp Your Personal Exams Guide

**Q1.** **பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 600 சொற்களில் கட்டுரை எழுதுக :** *100*

(அ) பண்பாடு ஏன் குறிப்பிடத்தக்க ஒன்றாக உள்ளது ?

(ஆ) சுறுசுறுப்பான நாடும் சுறுசுறுப்பற்ற குடிகளும் நீதிச் செயலாண்மை vs நீதியின் அதீதத் திறமையால் எற்படும் காரியக்கேடு.

(இ) நீதியின் அதீதத் திறமையால் எற்படும் காரியக்கேடு.

(ஈ) பள்ளிச் சிறார்களிடையே மரபுவழிப் பண்பாட்டை மதிக்கும் பண்பை ஊக்குவிப்பது எங்ஙனம் ?

**Q2.** **பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து அடியிற் காணும் வினாக்களுக்குத் தெளிவான, சரியான, சுருக்கமான விடை எழுதுக :** *12×5=60*

பெண்கள் ஆகாயத்தில் சரிபாதியைப் பிடித்துள்ளனர் என்று கூறப்படுகிறது. அவர்கள் இன்னும் அதிகமாக உள்ளனர் என்று ஆணித்தரமாக நாம் விவாதிக்க முடியும். இருப்பினும் நடைமுறையில், ஒவ்வொரு நாட்டிலும் அதன் வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு பண்பாட்டிலும் மரபிலும், ஒவ்வொரு சமயம், சாதி, சாதிப்பிரிவு, இனம், சமயக்கோட்பாடு, இனப் பண்பிலும், நாம் வாழ்ந்த கடந்த காலத்திலும் இன்றைய வேறுபட்ட நிகழ் காலத்தும் என வாழ்க்கையின் அனைத்துக் கட்டங்களிலும் ஏற்பட்ட வேற்றுமைகளிலும் ஆண்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில்

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

பெண்கள் எப்போதும் தாழ்வு நிலையிலேயே இருந்து வருகிறார்கள். உணவு, பணி, கல்வி, ஆரோக்கியப் பாதுகாப்பு, வளர்ச்சித் திட்டங்களில் பங்கேற்கும் வாய்ப்பு ஆகியவற்றிலும் வழிநடத்த, சிந்திக்க, கனவு காண, கனவுகளை நனவாக்க முதலிய பல நிலைகளிலும் பெண்கள் இரண்டாம்தரக் குடியாகவே வேறுபடுத்தப்படுகிறார்கள். உண்மையில் சொல்லப் போனால், பல்லாயிரம் ஆண்டுகளாக, அவர்கள் உலகில் மிகப் பெரிய 'சிறுபான்மையினராக' இருந்தார்கள்; இருக்கிறார்கள்.

பெண்கள் தங்கள் உரிமையை நிலைநாட்ட இயலாத பிரதிநிதிகளாகவே நடத்தப்படுவது ஆணாதிக்கத்தின் விளைவு. சமூக நடைமுறை, சட்டங்கள், நிறுவனங்கள் போன்றவற்றில் சம மதிப்பும் உரிமையும் பெறும் தகுதி உடையவர்களாகவும் மதிப்பும் தன்னாட்சியுடையவர்களாகவும் வாழும் முழுமையான நபர்களாக அவர்கள் பார்க்கப்படுவதில்லை. மாறாக, ஆணின் கையாளாகவே நடத்தப்படுகின்றனர்; அதாவது மூடாக்கில் ஒளிந்திருக்கும் இனவிருத்தி செய்யும் பெண்களாக, பாதுகாவலர்களாக, போகப் பொருளாக, குடும்பத்தின் பொது வளமைக்கான பிரதிநிதிகளாக மட்டுமே கருதப்படுகின்றனர். ஆண்களுக்குரிய இணைப்புறுப்பாக, அதாவது மகள்களாக, மனைவிகளாக, தாய்மார்களாக மட்டுமே பெண்களுக்குப் பண்பாட்டு நிலையில் ஏற்புடைமை உள்ளது. மற்றப்படி, அவர்கள் தவிர்க்கப்படுபவர்கள் அல்லது தாழ்ந்தவர்களே.

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

தனிநிலை மகளிர் இத்தகைய காரணிகளுக்கு அப்பாற்பட்டவர்கள். சமூகப் பண்பாட்டின் அடிப்படையில் ஒத்துக்கொள்ளப்பட்ட திருமண வயதை எட்டிய, ஆனால் திருமணமாகதவர்கள் அல்லது கணவனை இழந்தோர், விவாகரத்து பெற்றவர்கள் அல்லது கணவனைப் பிரிந்து வாழ்வோர் ஆகியோர் தனிநிலை மகளிர் என்பதில் அடங்குவர். ஆணின் பாதுகாப்பின்மை என்பது சமூகத்தால் இழிவாகக் கருதப்படுகிறது. மேலும் ஒரு பெண், விபத்து அல்லது நோயால் கணவன் இறந்துவிட்ட நிலையில், ஆணின் பாதுகாப்பின்றித் தனிமையில் வாழ முற்படும் போது, மேலும் அதிகமாக, சமூகத்தின் வன்மப் பார்வைக்கு ஆளாகிறாள். ஆண்களின் நிழல் கூடப் படாத, தனியே வாழும் பெண்ணின் மீது ஆணின் சினம் பாய்வதும் உண்டு.

வளரும் நாடுகள் பலவற்றிலும் பெண்கள் 60-லிருந்து 80 விழுக்காடு உணவை உற்பத்தி செய்கின்றனர்; உலக அளவிலும் உணவு உற்பத்தியில் 50 விழுக்காடு உற்பத்தி செய்யும் பொறுப்பில் இருப்பவர்கள் பண்பாட்டு ரீதியாகவும், பெரும்பாலான வீடுகளில் உணவு தயாரித்தளிப்பது பெண்கள்தாம். இருப்பினும் இந்தியாவில், சமூகப் பண்பாட்டு நடைமுறைகளின்படி, வீட்டிற்குள் பெண்கள் கொஞ்சமாகவும் கடைசியாகவும் தான் உண்பார்கள். ஆனாலும், வீட்டில் உணவு பற்றாக்குறை ஏற்பட்டால் பெண்கள் உண்ணுவது கூட இல்லை.

குடும்பத்திற்குள் நடக்கும் இந்தச் சமத்துவமின்மை காரணமாக, போதுமான உணவு இருக்கும் வீடுகளிலும் கூட, அனைவருக்கும் சமமாக உணவுப் பங்கீடு செய்யாத நிலையில், பெண்கள் போதுமான ஊட்டச்சத்துடைய உணவுகளை உண்பதிலிருந்து விலக்கப்படுகிறார்கள். தனியாக உலகத்தோடு போராடி வாழ்ந்தாலும் கூட, தனிநிலை மகளிர் அதிகப்படியாகப் பாலின வேறுபாட்டுத் தாழ்வு நிலைக்கு ஆளாவதுடன், உணவுக்கும் வாழும் வழிகளுக்கும் தடையாக உள்ள சமூகத் தளைகளாலும் கட்டுப்படுத்தப் படுகின்றனர்.

ஆண்கள், சிறுவர்களை விடக் குறைந்த எண்ணிக்கையில் பெண்களும் சிறுமிகளும் வாழும் ஒரு சில நடுகளுள் இந்தியாவும் ஒன்று. நாட்டின் மக்கள் தொகையில் பெண்களின் தொகை கடந்த நூற்றாண்டில் தொடர்ந்து குறைந்துகொண்டே வருகிறது. 2001-ஆம் மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி, ஒவ்வொரு 1000 ஆண்களுக்கு 933 பெண்கள் என்ற விகிதமே உள்ளது. ஆரோக்கியப் பாதுகாப்பு, ஊட்டச்சத்துடைய உணவு, போன்ற வாழ்க்கை வாய்ப்புகள் ஆண்களுக்கும் சிறுவர்களுக்கும் அளிக்கப்படுவதுபோல பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் அளிக்கப்பட்டால், பெண்களுக்கும் ஆண்களுக்குமான எண்ணிக்கை ஓரளவிற்குச் சமமாவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும். மாறாக, 2001-இல் பெண்களும் சிறுமிகளும் எண்ணிக்கையில் ஆண்களையும் சிறுவர்களையும்

www.prepp.in

விட 3 கோடி 50 இலட்சம் என்ற அளவில் குறைவாக உள்ளனர். இந்தப் பாலின விகிதம் 2011-இல் 940 ஆக உயர்ந்தாலும், இதுவும் மிகக் குறைவான அளவே. மற்றொரு காரணியும் மிகவும் கவலைக் கிடமான ஒன்று. குழந்தைகளின் பாலின விகிதம் அல்லது 0 - 6 வயதுக்குட்பட்ட பெண்கள், ஆண்களின் பாலின விகிதம் வரவாறு காணாத வகையில் மிகக் குறைவாக 2001-இல் 927 ஆக இருந்தது. அது 2011-இல் 914 ஆக இன்னும் குறைந்தது. இந்த விகித எண்கள் சந்தேகத்திற்கு இடமின்றி, நிரூபிப்பது என்னவென்றால் சமூகம் மற்றும் பண்பாடு, வளர்ந்து வரும் தொழில் நுட்பம் போன்றவற்றால் ஏற்படும் பாலின வேறுபாடு, புறக்கணிப்பு, வெறுப்பு முதலானவை, பல இலட்சக் கணக்கான அளவில் காணாமல் போகும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான வாழ்க்கை வாய்ப்புகளை மறைத்து விடுகின்றன. முடிவாக, ஒன்றுக்கு மேற்பட்ட பல வழிகளில், நம் இந்திய சமூகம் கால அடைவில் பல இலட்சக் கணக்கான சிறுமிகளையும் பெண்களையும் கொன்று வருகிறது.

**வினாக்கள் :**

(a) சிறுமிகளையும் பெண்களையும் பொறுத்தமட்டில் மக்கள் தொகைக் கணக்கீட்டு எண்கள் நமக்கு அறிவுறுத்தும் செய்தி யாது ? *12*

(b) பெண்களுக்கும் உணவுக்கும் இடையேயான நேர்மையற்ற தன்மை பற்றிய முரண்பாட்டு நிலை யாது ? *12*

www.prepp.in

(c) பெண்கள் ஆகாயத்தின் பாதிக்கும் மேலான இடத்தைப் பிடித்தவர்கள் என்பது விவாதத்திற்குரியது என்று கட்டுரை அசிரியர் கூறுவதன் பொருள் என்ன ? 12

(d) ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்கள் 'வெறும் கருவிகளாகவே' இருப்பது எவ்வாறு ? 12

(e) கட்டுரை ஆசிரியரின் கூற்றுப்படி, நம் சமுதாயத்தில் தனிநிலை மகளிர் அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் என்பதை விளக்குக. 12

**Q3. கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்பிட வேண்டாம்.** *60*

நம்பிக்கை, விசுவாசத்துடன் இருப்பது பாராட்டிற்குரியது என்பதை நம்மில் பெரும்பாலானோர் ஒத்துக் கொள்வர். குடும்பத்திற்கு விசுவாசமாக இருப்பது, நண்பர்களுக்கு விசுவாசமாக இருப்பது, நாட்டிற்கு விசுவாசமாக இருப்பது, இன்னும் சொல்லப்போனால், குறிப்பிட்ட சில காரணங்களால், நாம் நன்றியுடன் நினைத்துப் பார்க்கும் தனி நபர்களிடமும் குழுக்களிடமும் விசுவாசமாக இருப்பது என்பதை நாம் ஒத்துக் கொள்கிறோம். அத்துடன் நாம் 'விசுவாசம்' பற்றிப் பேசும்போது, உதவிக்கரம் நீட்டத் தயாராக உள்ளதென்றே நாம் கருதுகிறோம். அவர்கள் ஒரு துன்பத்தில் அல்லது அபாயத்தில் இருக்கும்போது, மட்டுமன்றி, எல்லாக் காலகட்டத்திலும்

www.prepp.in

தொடர்ந்து அவர்களது நலத்தில் குறையாத ஆர்வத்துடன் செயல்படுவதையே இது குறிக்கிறது. இது மிகவும் தெளிவான ஒன்று. உதாரணமாக, ஒருவர் விசுவாசமற்றவராக இருப்பது என்பது தன் பெற்றோரிடம் எந்தவொரு அக்கறையுமின்றி நிர்க்கதியாகத் தவிக்க விடுவது, அல்லது ஒருவர் தன் தாய் நாட்டிற்கு எதிரான படையில் சேர்ந்து போரிடுவதுடன், தன்னாட்டு மனிதர்களையே பாகுபாடின்றிக் கொன்று குவிப்பது போன்றவற்றைக் கூறலாம். அத்தகைய மக்களை நம்மில் பெரும்பாலோரும் ஒப்புக் கொள்வதில்லை.

இருந்தாலும் ஒருவர் விசுவாசம் உடையவர் அல்லது இல்லாதவர் என்பதை முடிவு செய்வதற்குக் கடினமான சில சூழல்கள் அடிக்கடி ஏற்படுவதுண்டு. பெற்றோர் தம்முடைய பொருள் வருவாய்க்கு உதவும் வகையில் தம் குழந்தையின் படிப்பை நிறுத்தி வேலைக்குப் போகச் சொல்லும்போது, புத்திசாலியான அக்குழந்தை தன் மறுப்பைத் தெரிவிக்கக் கூடும். இன்னும் சில ஆண்டுகள் படிப்பைத் தொடர்வதன் மூலம் எதிர் காலத்தில் தன் பெற்றோருக்கு முழுமையாகப் பண உதவி செய்ய முடியும் என அவன் நம்பியிருக்க வேண்டும். மேலும் அவன் படிப்பை இப்போதே நிறுத்திவிட்டால், அவனுடைய திறமைகள் வீணடிக்கப்படுவதோடு எவருக்கும் உதவி செய்ய முடியாத நிலை ஏற்படும். சில வேளைகளில், ஒரு பையன் அல்லது பெண் இத்தகைய முடிவெடுக்கும்போது, எதிர்காலத்தைக் கற்பனை செய்து பார்க்காத மக்கள் சிலர் பழித்துரைப்பதுமுண்டு; ஆனால் அத்தகைய ஒரு குழந்தை,

www.prepp.in

பகுத்தறிவுடனும் கூரறிவுடனும் இருக்கும் பட்சத்தில் அவனை விமர்சிப்பதைவிட ஊக்கம் அளிப்பதே தகுதிப்பாடுடையது. மாறாக, சில சூழல்களில் எடுத்துக்காட்டாக, ஒரு சிறுவனின் பெற்றோர் மிகுந்த வறுமையில் வாடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அப்போது வெளியே பணிக்குச் சென்று அவர்களைக் காப்பாற்ற மறுப்பது விசுவாசமற்ற ஒன்றாக இருக்கும். பிற்காலத்தில், அவனே வாழ்க்கையின் வெற்றிப் பாதையில் செல்லும்போது, தன் சிறுவயதுப் பிராயத்தில் தன் விசுவாசமின்மையை நினைத்து எப்போதும் வருந்தவும் கூடும்.

இதிலும் கடினமான ஒரு சிக்கல் உண்டு. அது சில வேளைகளில், ஒரு மனிதனுக்கும் அவனது நாட்டின் அரசு நிர்வாகத்திற்குமுள்ள உறவு பற்றியதாக இருக்கும். நாட்டை உண்மையாகவே நேசிக்கும் குழுவினராக இருக்கும் சிலர் அரசுக்கு எதிராகக் கலகம் செய்வர்; சில வேளைகளில் ஆயுதங்களையும் பயன்படுத்துவர். ஏனென்றால் அந்த அரசு நாட்டிற்குக் கேடு விளைவிக்கும் ஒன்று என்று நம்புகிறார்கள். எனவே, இதையன்றி வேறு வழியில் அரசைக் கவிழ்க்க முடியாது என்று கருதுவர். இவர்கள் 'புரட்சியாளர்கள்' என்றும் 'துரோகிகள்' என்றும் அரசால் கருதப்படுவர்; முதல் சொல் சரியானது என்று அடித்துச் சொல்லலாம். ஆனால் இரண்டாவது சொல்லை அவ்வாறு சொல்வதற்கில்லை. ஏனெனில், புரட்சியாளரான அவர்கள் தங்கள் அரசுக்கு விசுவாசியாக இருப்பதைவிட, நாட்டின் சகமனிதர்களிடமும் உண்மையான விசுவாசத்துடன் இருப்பவர்கள். துரதிருஷ்ட வசமாக, ஒரு

www.prepp.in

புரட்சியாளர் தன் நாட்டிற்கு விசுவாசமாக இருக்க நினைப்பவரா அல்லது தனிப்பட்ட சுய லாபத்திற்காகச் செயல்படுபவரா ? என்பதை அறிவது கடினமான ஒன்று. அப்புரட்சியின் வெற்றியைப் பொறுத்து மட்டுமே அறியலாம். இப்பொழுது ஒரு வினா எழுகிறது. புரட்சியாளர்கள் வெற்றிபெற்று புது அரசை அமைத்து விட்டார்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்போது அவர்களது அரசியல் எதிரிகள் உள்ளிட்ட ஒட்டு மொத்த மக்களுக்கும் பேச்சுரிமை, சுதந்திரமான கருத்துரிமை போன்ற சில அடிப்படை உரிமைகள் உள்ளன என்பதை ஒத்துக்கொண்டு மக்கள் ஆதரவைத் திரட்ட முயல்வார்களா ? அல்லது தங்களுடைய அரசியல் எதிரிகளை ஒழிக்கத் தமது பதவியைப் பயன்படுத்துவார்களா ? முன்னதை அவர்கள் செய்தால், அவர்கள் உண்மையிலேயே தம் நாட்டிற்கு விசுவாசமானவர்களாக இருக்கிறார்கள் என்பதை நாம் நம்ப முடியும்; மட்டுமன்றி தாங்கள் சார்ந்த குழுவினருடைய நலத்தை மட்டும் விரும்புவர்கள் அல்ல என்பதையும் அறிய முடியும். ஆனால் பின்னதைச் செய்தால், அவர்கள் தங்கள் நாட்டிற்கோ, தாம் ஏற்றிருக்கும் அரசுப் பதவிக்கோ விசுவாசமாக நடக்கவில்லை என்பதை அறியலாம். அப்போதுதான் மிகவும் காலந்தாழ்ந்தே நமக்கு புத்தி வந்தது என்பதை அறியலாம்.

*(434 சொற்கள்)*

**Q4.** பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க : *20*

ஒரு அமீர் தன்னுடைய கப்பலில் யாத்திரை புறப்பட்டான். அப்போது ஒரு பெரிய புயல் வீசியது. அந்தக் கப்பலிலிருந்த அடிமைகளுள் ஒருவன், அதற்கு முன்னால் கடல் பயணம் செய்தவனல்ல. எனவே, அவன் அச்சத்தால் புலம்பி அழுதான். இது கொஞ்ச நேரமாக நடந்தது. ஆனால் ஒருவராலும் அவன் அழுவதை நிறுத்த முடியவில்லை. அந்த அமீர் கோபத்துடன் கேட்டான், "இந்த ஈனமான கோழையை அமைதிப்படுத்த இங்கு யாருமே இல்லையா ?"

அக்கப்பலில் பயணியாக வந்திருந்த ஒரு தத்துவ ஞானி சொன்னார், "என் விருப்பப்படி, இவனை நடத்த அனுமதித்தால் என்னால் இம்மனிதனை அடக்க முடியும்." அமீரும் "அனுமதி தந்தேன் உங்கள் பணியைத் தொடங்குங்கள்" என்றான்.

தத்துவ ஞானியோ, சில கப்பல் அலுவலர்களை அழைத்து, அந்த அடிமையைக் கடலிலே வீசியெறியச் சொன்னார். அவர்களும் அது போலச் செய்தனர். பாவம் அந்த மனிதன் நம்பிக்கை இழந்த நிலையில், அச்சத்தால் தன் கைகளையும் கால்களையும் கடுமையாக நீரில் அடித்துக்கொண்டு கதறினான். ஆனால் ஒரு சில விநாடிகளில், அந்தத் தத்துவ ஞானி அவனை மறுபடியும் கப்பலுக்குள் ஏற்றிவிட உத்தரவிட்டான். கப்பலுக்குள் வந்ததும், அந்த அடிமை களைப்பாலும் அச்சத்தாலும் நடுங்கினான், ஆனால் பிறகு அமைதியாகி விட்டான். இந்த திடீர் மாற்றத்தை கண்ட அமீர் ஆச்சரியப்பட்டான். அவர், இதற்கான காரணம் என்னவென்று தத்துவஞானியிடம் கேட்ட போது, அந்த ஞானி சொன்னது; "நாம் மோசமான நிலைமையில் வைக்கப்படும் வரை நாம் எந்த சூழ்நிலையில் எப்படி வசதியாக முடியும் என்று புரிந்து கொள்ள முடியாது."

www.prepp.in
Prepp
Your Personal Exams Guide

**Q5.** கீழ்காணும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதுக : *20*

Man has always been fascinated by dreams. He has always tried to find explanations for his dreams. Perhaps dreams tell us about the future or the past, perhaps they tell us about our deepest fears and hopes. I don't know. Today, I want to give you a completely different explanation. But before I do so, I must give you one or two facts about dreams. First of all, everybody dreams. You often hear people say, 'I never dream,' when they mean, 'I can never remember my dreams.' When we dream, our eyes move rapidly in our sleep as if we were watching a moving picture, following it with our eyes. This movement is called 'REM', that is Rapid Eye Movement. REM sleep is the sleep that matters. Experiments have proved that if we wake people up throughout the night during REM, they will feel exhausted the next day. But they won't feel tired at all if we wake them up at times when they are not dreaming. So the lesson is clear : it is dreaming that really refreshes us, not just sleep. We always dream more if we have had to do without sleep for any length of time.

If that is the case, how can we explain it ? I think the best parallel I can draw is with computers. After all, a computer is a very primitive sort of brain. To make a computer work, we give it a program. When it is working, we can say it is 'awake'. If ever we want to change the program, that is to change the information we put into the computer, what do we do ? Well, we have to stop the computer and put in a new program or change the old program.

**Q6.** (அ) கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக : *1×5=5*

(i) நுனிப்புல் மேய்ந்தாற்போல *1*

(ii) துள்ளிக் கொண்டு *1*

(iii) விட்டுவிட்டு *1*

(iv) மரத்துக்கு மரம் *1*

(v) அடை காத்தல் *1*

www.prepp.in
Prepp
Your Personal Exams Guide

(ஆ) கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக : *1×5=5*

(i) அன்றலர் *1*

(ii) சான்றிடு *1*

(iii) ஓடக்கரை *1*

(iv) கிணற்றுத் தவளை *1*

(v) பற்பொடி *1*

(இ) கீழ்க்காணும் சொற்களுக்கு எதிர்ச் சொற்களை தருக : *1×5=5*

(i) சோம்பல் *1*

(ii) சூடு *1*

(iii) மெய் *1*

(iv) பழமை *1*

(v) ஏற்றம் *1*

(ஈ) கீழ்க்காணும் சொற்களின் பிழை நீக்கி எழுதுக : *1×5=5*

(i) ஐநூறு *1*

(ii) எண்ணை *1*

(iii) இருமாப்பு *1*

(iv) முளக்கம் *1*

(v) புண்ணகை *1*

www.prepp.in
Prepp
Your Personal Exams Guide

(உ) கீழ்க்காணும் சொற்களின் பொருள் வேறுபாட்டினை ஏற்ற சொற்றொடர்களில் அமைத்துக் காட்டுக : 3×5=15

(i) பனி — பணி — மணி 3

(ii) தலை — தளை — தழை 3

(iii) அரன் — அரண் — அறம் 3

(iv) ஆனை — ஆணை — ஆணி 3

(v) வலி — வளி — வழி 3

(ஊ) கீழ்க்காணும் வாக்கியங்களை எதிர் மறையில் அமைத்து எழுதுக : 1×5=5

(i) நேற்றிரவு நல்ல மழை பெய்தது 1

(ii) நாளைக்காலை என் தந்தை வருவார் 1

(iii) சிறுவன் வேகமாக நடந்தான் 1

(iv) உன் கையெழுத்து அழகாக இருக்கிறது 1

(v) பூமியில் எங்கே வெட்டினாலும் நிலக்கரி கிடைக்கும் 1